**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 120/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 6 |
| Name (திரு/திருமதி) | : பாலகோபால் |
| Father's Name/ Husband's Name | : கிருஷ்ணராஜ் |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : மருத்துவர் |
| Age | : 50 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.11.2025**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் செஞ்சி அரசு மருத்துவமனையில் பொறுப்பு மருத்துவராக பணி செய்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் செஞ்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்த போது கடந்த 30.06.2022 அன்று மாலை 07.10 மணிக்கு திரு.ப சங்கர் த.பெ. ஏழுமலை என்பவரை சேட்டு என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவரை விசாரணை செய்ததில் தெரிந்த நபர் ஒருவர் அன்றைய தினம் மாலை 04.00 மணியளவில் சிங்கவரம் ஏரி அருகே வைத்து கடப்பாரையால் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. வலது காலில் 3x3 c.m அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. 2. வலது காலின் முட்டிக்கு கீழ் பகுதியில் 4x3 c.m அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்தேன். அவரின் மருத்துவ ஆவணங்களை நான் பரிசீலனை செய்ததில் அவர் சென்னை ஸ்டேன்லி அரசு மருத்துவமனையில் கடந்த 30.06.2022 அன்று சிகிச்சைக்கு சேர்ந்து 13.07.2022 அன்று Discharge செய்யப்பட்டுள்ளார். அவருக்கு வலது காலில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டு தகடு பொருத்தி இருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என காயச்சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. காயமடைந்த நபர் கரடுமுரடான பகுதியில் தாமாக கீழே விழுந்திருந்தால் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதா என்றால் அதிவேகமாக சென்று விழுந்திருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. காயச்சான்றில் குறிப்பிட்டுள்ள கிழிந்த காயங்கள் கடப்பாரையால் தாக்கியதால் ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.